# ICSE SEMESTER 2 EXAMINATION

## SPECIMEN QUESTION PAPER

## TAMIL (SECOND LANGUAGE)

*Maximum Marks: 40*

*Time allowed: One and a half hours*

*Answers to this Paper must be written on the paper provided separately.*

*You will not be allowed to write during the first 10 minutes.*

*This time is to be spent in reading the question paper.*

*The time given at the head of this Paper is the time allowed for writing the answers.*

*Attempt **all** questions from **Section A.***

***Section B** – Answer questions from **any two books** that you have studied.*

*The intended marks for questions or parts of questions are given in brackets [ ].*

### SECTION A

**Question 1**

Write a short composition in **Tamil** of approximately **200** words on any **one** of the following topics: **[12]**

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து 200 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக :

(i) "பெருகிவரும் நோய்களும் அதனைத் தடுக்கும் வழிமுறைகளும்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

(ii) "ஆரோக்கியமான வாழ்வைப் பெற 'யோகாசனம்' அவசியம்" - என்பதை வலியுறுத்தி ஒரு கட்டுரை எழுதுக.

(iii) பெரும்பாலும் இன்றைய இளைஞர்கள், "மேல் படிப்பிற்காகவும் வேலைக்காகவும் அயல் நாடுகளுக்குச் செல்வதுதான் சரி! என்று நினைக்கிறார்கள்!" - இது பற்றி உமது கருத்துகளைத் தொகுத்து இருவர் பேசுவது போன்று உரையாடல் ஒன்றை அமைக்கவும்.

(iv) "பணம் பத்தும் செய்யும்" - என்னும் பழமொழியினை மையமாக வைத்து சிறுகதை ஒன்றினை எழுதுக.

(v) கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, உமக்குத் தோன்றும் எண்ணங்களையும் படம் குறிப்பிடும் செய்திகளையும் இணைத்து கட்டுரை ஒன்று வரைக.



**Question 2**

Write a letter in **Tamil** in approximately 120 words on any **one** of the topics given below: **[8]**

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து 120 வார்த்தைகளுக்கு மிகாமல் கடிதம் எழுதுக :

(i) ஓய்வு நேரத்தை எவ்வாறு பயனுள்ள வழியில் செலவிட வேண்டும் - என்பது குறித்து, மாமா வீட்டில் தங்கிப் பயிலும் உன்னுடைய தம்பிக்கு அறிவுரைக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

(ii) புதியதாகக் குடி பெயர்ந்துள்ள வீட்டிற்கு மின் இணைப்பு வசதி வேண்டி மின் வாரியத்துறை உதவிப் பொறியாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.

## SECTION B (20 Marks)

*(Answer questions from **any of the two books** that you have studied.)*

### சரித்திரச் சம்பவங்கள் (Charitra Sambavangal)

### ஆசிரியர் - வாண்டுமாமா (By – Vaandumama)

**Question 3**

Read the extract given below and answer in **Tamil** all the questions that follow :

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்கவும் :

"உலகப் புகழ் பெற்ற தாஜ்மகாலைக் கட்டிய ஷாஜஹானின் கடைசிக் காலம் மகிழ்ச்சிகரமாக இல்லை. புகைந்து கொண்டிருந்த அரசுரிமைப் போராட்டம் ஒரு நாள் குபீரென்று பற்றிக் கொண்டது. தகப்பனாருக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார்கள் இளைய புதல்வர்கள். முறைப்படி மூத்தவனான தாரா - சிங்காதனத்தில் அமருவதை விரும்பவில்லை தம்பிகள்."

<u>வினாக்கள் :-</u>

(i) 'கோழையும் வாள் வீசப் பாய்ந்து எழுவான்' - விளக்குக. **[2]**

(ii) 'மொகலாயப் பேரரசில் ராஜா தோடர்மல்லின் சட்ட, திட்டங்கள்'-விளக்குக. **[2]**

(iii) சத்ரசாலுக்கு யார், ஏன் கங்கணத்தை அனுப்பினார் ? **[3]**

(iv) சித்தூரைக் காக்கும் கடமை யாவரிடம், ஏன் ஒப்படைக்கப்பட்டது ? **[3]**

### இராஜராஜ சோழன் (Rajaraja Cholan)

### சரித்திர நாடகம் (Historical Drama)

### ஆசிரியர் - அரு. ராமநாதன் (By – R. Ramanathan)

**Question 4**

Read the extract given below and answer in **Tamil** all the questions that follow:

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்கவும் :

"குந்தவி நாச்சியாரைப் பரிகசித்ததற்கு இவன் மீது பழி தீர்த்துக் கொள்ளலாம். உங்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்களுக்கு அது ஒரு நல்ல எச்சரிக்கை. நம்மை

இகழ்ந்தவனின் கர்வமும் அடங்கும். ஒரே கல்லில் மூன்று குருவிகளை வீழ்த்துவது தான் ராஜதந்திரம். ஹி... ஹி..."

வினாக்கள் :

(i) இராஜராஜ சோழன் நாடக மாந்தருள் உனக்குப் பிடித்த இரண்டு பெயர்களையும் அதற்கான காரணங்களையும் எழுதுக. [2]

(ii) நகைச்சுவைப் புலவர்கள் யாவர் ? அவர்களின் சிறப்பியல்புகள் யாவை ? [2]

(iii) "விமலாதித்தனுக்கு என்ன! ஆனந்தமாகப் பொழுது போக்குகிறான்" - யாரிடம், யார், ஏன் கூறினார்? [3]

(iv) சோழ நாட்டின் 'ஒற்றர்' யார் ? அவர் யாரால், யாருக்காக நியமிக்கப்பட்டார் ? அவருக்கு யாருடன் திருமணம் நிகழ்த்த முடிவானது ? [3]

## வீரபாண்டிய கட்டபொம்மன் (Veera Pandiya Kattabomman)

## ஆசிரியர் - கே. ஜீவபாரதி (By – K. Jeeva Bharathi)

**Question 5**

Read the extract given below and answer in **Tamil** all the questions that follow :

பின் வரும் பகுதியைப் படித்துணர்ந்து, அதன் கீழ் வரும் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்கவும் :

"இனி தெற்கு வாயிலைக் குறிவைத்துத் தாக்குவது என பானர்மேன் முடிவு செய்தான். கோட்டையின் வடக்கு வாயிலை ஊமைத்துரையும், தெற்கு வாயிலை வெள்ளையத் தேவனும் தலைமை ஏற்று பாதுகாப்பது என கட்டபொம்மனின் ஆலோசனைக் கூட்டம் முடிவு செய்தது"

வினாக்கள் :-

(i) ஆங்கிலேயரின் எண்ணத்தில் இடி விழச் செய்தது! - விளக்குக. [2]

(ii) காலின்ஸ் எவ்வாறு இறந்தான் ? [2]

(iii) யாருக்கு, யாவர் விருந்து கொடுத்தனர் ? அது அவனை என்ன செய்தது? [3]

(iv) "வீரபாண்டிய கட்டபொம்மன்" - புதினத்தில் இருந்து நீ கற்றுக் கொண்ட பாடம் யாது ? [3]